<u>முதன்மை மாவட்ட உரிமையியல் நீதிமன்றம், திட்டக்குடி.</u>

**முன்னிலை: திருமதி. B. ஹரிணிபிரியா, B.A., L.L.B.,(Hons).,**

**முதன்மை மாவட்ட உரிமையியல் நீதிபதி, திட்டக்குடி.**

**2025ஆம் ஆண்டு அக்டோபர் திங்கள் 13ஆம் நாள் திங்கள் கிழமை**

**வழக்கிடை மனு எண். 181/2025**

**அசல் வழக்கு எண்.51/2025**

வெங்கடேசன் ... மனுதாரர்/1ம் எதிர்வாதி

// எதிர் //

1.மாயவன்
2.ராணி ... எதிர்மனுதாரர்கள்/வாதிகள்

இம்மனுவானது 02.09.2025ஆம் தேதியன்று தாக்கல் செய்யப்பட்டு 04.09.2025ஆம் தேதியன்று கோப்பிற்கு எடுக்கப்பட்டது. மனுதாரர்/1ம் எதிர்வாதி தரப்பில் அரசு வழக்கறிஞர் திரு.கே.சீனிவாசன் அவர்கள் முன்னிலையாகியும், எதிர்மனுதாரர்கள்/ வாதிகள் தரப்பில் வழக்கறிஞர் திரு.சர்பூதின் அலி அகமது அவர்கள் முன்னிலையாகி இம்மனுவினை நிபந்தனையின் பேரில் அனுமதிக்கலாம் என்று கடந்த 21.09.2025 அன்று ஒப்புதல் அளித்துள்ளார். இம்மனு 23.09.2025ம் தேதியன்று இறுதி விசாரணைக்காக வந்தபோது மனு, மனுதாரர் தரப்பு வாதம் ஆகியன பரிசீலனை செய்தும், இதுநாள் வரை என் சீரிய ஆய்விலிருந்து வரும் இம்மனுவில் இன்று இந்நீதிமன்றம் கீழ்கண்டவாறு வழங்கும்...

**உத்தரவு**

இம்மனுவில் கண்டுள்ள காரணங்களுக்காக இந்நீதிமன்றத்தார் அவர்கள் அருள்கூர்ந்து 19.08.2025 தேதியில் மனுதாரர் / 1ம் எதிர்வாதி பேரில் பிறப்பிக்கப்பட்ட எக்ஸ்பார்ட்டி ஆர்டரை ரத்து செய்துக்கொண்டு இவ்வழக்கை மேல்நடத்த வேண்டி

உரிமையியல் விசாரணை நடைமுறை தொகுப்பு சட்டத்தின் வகுமுறை 9 விதி 7ன் கீழ் இம்மனு தாக்கல் செய்யப்பட்டிருக்கிறது.

**2. மனுவின் சுருக்கம்**

**2.1** மனுதாரர் அசல் வழக்கில் 1ம் எதிர்வாதி என்றும் தன் பேரில் எதிர்மனுதாரர்கள்/ வாதிகள் பாகம் கோரி வழக்கு தாக்கல் செய்துள்ளார்கள் என்றும் இவ்வழக்கில் தான் இந்நீதிமன்றத்தில் ஆஜராக வேண்டி 19.08.2025 தேதியில் வாய்தா வைக்கப்பட்டிருந்தது என்றும் தனக்கு உடல்நிலை சரியில்லாத காரணத்தினால் தான்னல் மேற்படி 19.08.2025 தேதியில் இந்நீதிமன்றத்தில் ஆஜராக இயலவில்லை என்றும் தன்னால் மேற்படி 19.08.2025 தேதியில் இந்நீதிமன்றத்தில் தான் ஆஜராகாததால் தன் பேரில் எக்ஸ்பார்ட்டி ஆர்டர் பிறப்பிக்கப்பட்டுள்ளதாக இப்பால் விசாரிக்கையில் தெரியவந்தது என்றும் தான் வேண்டுமென்றோ அலட்சியமாகவோ இருக்கவில்லை என்றும் தெய்வாதீனமாக ஏற்பட்ட ஒன்றாகும். தனக்கு இவ்வழக்கில் கூடிவரக்கூடிய கட்சி உள்ளது என்றும் எனவே 19.08.2025 தேதியில் தன் பேரில் பிறப்பிக்கப்பட்ட எக்ஸ்பார்ட்டி ஆர்டரை ரத்து செய்துகொண்டு இவ்வழக்கை மேல்நடத்த உத்திரவிட வேண்டியது அவசியமும் நியாயமுமாகின்றது. இல்லாவிடில் தனக்கு பெருத்த கஷ்ட நட்டம் ஏற்படும் என்றும் ஆகவே இந்நீதமன்றத்தார் அவர்கள் அருள்கூர்ந்து மேற்கண்ட காரணங்களால் 19.08.2025 தேதியில் தன் பேரில் பிறப்பிக்கப்பட்ட எக்ஸ்பார்ட்டி ஆர்டரை ரத்து செய்துக்கொண்டு இவ்வழக்கை மேல்நடத்த உத்திரவிட வேண்டியது அவசியமும் நியாயமும் இருக்கிறது என்றும் குறிப்பிடப்பட்டுள்ளது.

**3.** எதிர்மனுதாரர்கள்/வாதிகள் தரப்பில் வழக்கறிஞர் திரு.சர்பூதின் அலி அகமது அவர்கள் முன்னிலையாகி இம்மனுவினை நிபந்தனையின் பேரில் அனுமதிக்கலாம் என்று கடந்த 21.09.2025 அன்று ஒப்புதல் அளித்துள்ளார்.

**4. இம்மனுவில் தீர்மானிக்கப்பட வேண்டிய பிரச்சனை என்னவெனில் இம்மனு அனுமதிக்கத்தக்கதா? இல்லையா? என்பதே ஆகும்.**

**4.1** மனுதாரர் தரப்பு வாதம் என்னவெனில் மனுதாரர் அசல் வழக்கில் 1ம் எதிர்வாதி என்றும் தன் பேரில் எதிர்மனுதாரர்கள்/வாதிகள் பாகம் கோரி வழக்கு தாக்கல் செய்துள்ளார்கள் என்றும் இவ்வழக்கில் தான் இந்நீதிமன்றத்தில் ஆஜராக வேண்டி 19.08.2025 தேதியில் வாய்தா வைக்கப்பட்டிருந்தது என்றும் தனக்கு உடல்நிலை சரியில்லாத காரணத்தினால் தான்னல் மேற்படி 19.08.2025 தேதியில் இந்நீதிமன்றத்தில் ஆஜராக இயலவில்லை என்றும் தன்னால் மேற்படி 19.08.2025 தேதியில் இந்நீதிமன்றத்தில் தான் ஆஜராகாததால் தன் பேரில் எக்ஸ்பார்ட்டி ஆர்டர் பிறப்பிக்கப்பட்டுள்ளதாக இப்பால் விசாரிக்கையில் தெரியவந்தது என்றும் தான் வேண்டுமென்றோ அலட்சியமாகவோ இருக்கவில்லை என்றும் தெய்வாதீனமாக ஏற்பட்ட ஒன்றாகும் என்று கூறப்பட்டுள்ளது. எதிர்மனுதாரர்கள்/வாதிகள் தரப்பில் இம்மனுவினை நிபந்தனையின் பேரில் அனுமதிக்கலாம் என்று கூறியுள்ள நிலையில், இருப்பினும் இருதரப்பினரையும் விசாரித்து சாட்சியம் மற்றும் சட்டத்தின் அடிப்படையில் தீர்வு காண்பதே நீதியின் நலனுக்கு உகந்ததாக இருக்கும் என்பதாலும் மனுதாரர்/1ம் எதிர்வாதிக்கு தமது வழக்கை எடுத்துரைக்க ஒரு வாய்ப்பினை அளிப்பது சட்டம் மற்றும் இயற்கை நீதிக்கோட்பாடுகளின்படி சரியானதாக இருக்கும் என்பதாலும், மேற்படி அசல் வழக்கினை மேல் நடத்த ஒருதலைப்பட்ச உத்தரவை நீக்கி, வழக்கை மேல்நடத்தும் பட்சத்தில் தான் வழக்கின் முடிவை எட்ட இயலும்

என்பதாலும், இம்மனுவை நீதியின் நலன் கருதி அனுமதிக்கலாம் என்று இந்நீதிமன்றம் முடிவு செய்கிறது.

**5. இறுதி முடிவு**

இம்மனு அனுமதித்து உத்தரவிடப்படுகிறது. செலவுத்தொகை இல்லை.

இந்த உத்தரவு என்னால் சுருக்கெழுத்தரிடம் சொல்லப்பட்டு அவரால் கணிணியில் தட்டச்சு செய்யப்பட்டு பின்னர் என்னால் பிழைநீக்கம் செய்யப்பட்டு 2025ஆம் ஆண்டு அக்டோபர் திங்கள் 13 ஆம் நாள் திறந்த நீதிமன்றத்தில் அவையறிய பகரப்பட்டது.

**(ஓம்.B. ஹரிணிபிரியா )**

முதன்மை மாவட்ட உரிமையியல் நீதிபதி,
திட்டக்குடி.

மனுதாரர் தரப்பில் சாட்சி மற்றும் சான்றாவணங்கள் : இல்லை
எதிர்மனுதாரர் தரப்பில் சாட்சி மற்றும் சான்றாவணங்கள் :இல்லை

**(ஓம்.B. ஹரிணிபிரியா )**

முதன்மை மாவட்ட உரிமையியல் நீதிபதி,
திட்டக்குடி.